80

லட்சிய வீரன்

'தாணாஜி! நீங்கள் சொல்லுவது எனக்குத் தெரியவில்லையா என்ன? நன்றாக அர்த்தமாகிறது. ஆனால் மகாராஜா ஜயசிங் சொல்லுவதும் முற்றிலும் சரி என்று தான் தோன்றுகிறது எனக்கு' என்று சிவாஜி தன் மனத்திலிருந்ததைக் கடைசியாகத் தன் ஆத்ம சிநேகிதனிடம் வெளியிட்டார்.

'பாதுஷா அவுரங்கஜேப்பிடம் நாம் சத்தியத்தையும் தர்மத்தையும் கடைப்பிடித்தால் நிச்சயம் நாசமடையவேண்டியது தான் என்பது என் தீர்மானமான அபிப்பிராயம்.'

'எதிரி அதர்மத்தைக் கைப்பற்றினால் நாமும் அந்த வீழ்ச்சியில் – அது வீழ்ச்சிதானே?– அவனைப் பின்பற்றுவதா என்று ஜயசிங் கேட்கிறார். அதற்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை.'

'ராஜ்ய விவகாரங்களில் ராஜதந்திர முறைகளின் அனுஷ்டானத்தில் தர்மத்தையும் சத்தியத்தையும் பற்றி நினைக்கக் கூடாதென்பதே என் கட்சி. உலக விவகாரங்களுக்கு ஒரு நியதியாக இருக்கும் அர்த்த சாஸ்திரமே நமக்கு ஆதாரம்.'

'தர்ம வழியாலும் சத்திய முறையாலும் வெற்றிகரமாக ராஜ்யம் ஸ்தாபிக்க முடியாது, அதிகாரம் செய்ய முடியாது என்றா நீங்கள் நினைக்கிறீர்கள்? நமது முன்னோர்கள் என்ன செய்தார்கள்? தர்ம யுத்தம் என்பது என்ன பின்?'

'அப்பொழுது கால தேச வர்த்தமானங்கள் வேறு. ஆகையால் தர்மமும் சத்தியமுமே உயர்ந்த முறையில் நடைபெற்றன.'

'தாணாஜி! நீங்கள் சொல்லுவது வேடிக்கையாக இருக்கிறது, அவற்றிற்குக் கால தேச வர்த்தமானங்களை அனுசரித்துத்தானா மதிப்பு? என் சத்தியம் வேறா? நமது தர்மம் வேறு, நமது மூதாதைகளின் தர்மம் வேறா? நன்றாக இருக்கிறது?!'

1943

'வாழ்க்கை நிலைமைக்குப் பொருந்தாத சத்தியத்தாலும் தர்மத் தாலும் என்ன பயன்? நமது முன்னோர்கள் உயர் வாழ்வு வாழ்ந்த காலம், சத்திய யுகம். அப்பொழுது பாரத வர்ஷம் முழுமையும் ஒரு குடையின் கீழ் இருந்தது. ஒரு தர்மத்தின் – சனாதன தர்மத்தின் – ஆதிக்கத்தில் இருந்தது. எனவே உள் நாட்டுச் சச்சரவுகள் யாவும் அந்த உயர்ந்த முறையில் நடந்து தீர்ந்தன, இப்பொழுது நிலைமை மாறிவிட்டது.'

'எப்படி மாறி விட்டதென்கிறீர்கள்?'

'பாரத சமுதாயம் தர்மத்திலும் ராஜ்ய முறையிலும் சிதைவு பட்டு விட்டது. நாடு பல்வேறு சிற்றரசுகளாகப் பிரிந்து ஏக சக்கரத்தை நிராகரித்தது முதலில்.'

'எதனால்? தர்மத்தாலா?'

'அல்ல. ஏக சக்கராதிபத்தியத்தின் கீழ் நாட்டில் ஏற்பட்ட அமைதியும் சுகமும் செழிப்பும் ஒரு கால அளவிற்குப் பிறகு மக்களுக்குச் சலிப்புக் கொடுத்துவிட்டது. அமைதியே ஒரு தேக்கமாகிவிட்டது. ஆதிபத்தியமும் வெகு காலத்துச் செருக்கில் திளைத்து சோம்பலும் சோர்வும் கொண்டு பலவீனமாகிவிட்டது. அதிருப்தி கட்டு மீறினதால் ஏகசக்கரம் உடை பட்டுப் பல சிற்றரசுகள் தோன்றின. அன்றே கலி ஆரம்பமாயிற்று.'

'அதனால்?'

'அதனால் அதுவரை தடைபட்டுக் கிடந்த ஆபத்து பாரத வர்ஷத்தை ஆக்கிரமிக்க ஆரம்பித்தது. ஒரு சக்கரத்தின் திரண்ட பலம் ஒருமுகமாக இருந்தபொழுது அன்னியர் படையெடுப்பென்பதே நடக்காததாய் இருந்தது. நாடு பிளவுபட்டதும் வடமேற்கிலிருந்து முதல் அலையாக யவனப் படையெடுப்பு வந்தது. உள்நாட்டுச் சச்சரவும் துவேஷமும் அன்னியனுக்கு அனுகூலம் செய்தது. சந்திர குப்த மௌரியனின் காலத்தில் ஆரம்பித்தது கலவரம்.'

'அவர் தான் மறுபடியும் சாம்ராஜ்யம் ஸ்தாபிக்க நாட்டை ஒன்றாக்க முயற்சி செய்தாரே!'

'அன்னியன் ஒருதரம் உள்ளே வந்தபிறகு அலைமேல் அலையாக அந்நியர் படையெடுப்பு அதிகமாகிவிட்டதால் சாம்ராஜ்ய நினைவு, ஏகசக்கர லட்சியம்–எல்லாம் நடக்க முடியாததாகிவிட்டது. அப்பொழுது தான் முதல் முதலாக தர்மம், சத்தியம்–எல்லாம் பலனற்றன. அதனால் தான் சந்திரகுப்தனின் ஆட்சி காலத்தில் சாணக்கியன் அர்த்த சாஸ்திரம் எழுதி ராஜதந்திரத்தை உண்மைக்குப் பதிலாக சமயோசிதவாதமாக ஸ்தாபித்தார்.

'சனாதன தர்மம்தான் நமது நாட்டில் ஏகசக்கரத்திற்குப் பதிலாக ஆட்சி புரிந்ததே?'

'அதுவும் புத்த ஜைனமதங்கள் தோன்றினதும் தகர்ந்துவிட்டது. அதன் சில குறைகளை எதிர்த்து புத்த பகவானும் ஜீனமுனியும் சீர்திருத்தம்

செய்ய முயன்றார்கள். அவர்கள் முயற்சி விபரீதமாக முடிந்தது. மதத்துவேஷத்தில் சத்தியமும் தர்மமுமே இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. தேச சச்சரவுகளும் அன்னிய நாட்டுப் படையெடுப்பு களுமாகச் சேர்ந்து நாட்டை நிலைகுலையச் செய்துவிட்டன.'

பாரத வர்ஷம் பிளவுபட்டு புண்ணிய பூமி பாப பூமியான சோகக் கதையை தாணாஜி சுருக்கமாகச் சொன்ன போது சிவாஜி அந்தந்த சமயங்களில் நிகழ்ந்த கஷ்டங்களையும் வீரர்களின் வீழ்ச்சிகளையும் எண்ணிப் பார்த்துக் கொண்டே வந்தார்.

ஆமாம். இந்தியா அன்னியருக்கடிமையான கதை ஒரு மகத்தான சோக சரித்திரம். ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஹிமயமலையிலிருந்து சிங்களம் வரையிலும், சிந்துவிலிருந்து கங்கை வரையிலும் ஒரு அரசன், ஒரு தர்மம், ஒரு சமயம் என்று இருந்தது. அப்பொழுது அன்னியர் வந்தாலும் பாரத சமுதாயத்தில் ஆகர்ஷணமாகி விட்டார்கள்; எதிர்த்து நாட்டை ஆக்கிரமிக்கவும் முடியவில்லை; இங்கே தனித்து இருக்க முடியவில்லை.

ராமனுடைய விரதம்போல் பாரத தேவியும் ஒரு வாக்கு, ஒரு தர்மம், ஒரு பாணம் கொண்டிருந்தாள். அவளுடைய விரதம் கலைந்தது எதனால்?

அந்த தர்மமும் அந்த ஆதிபத்தியமும் எவ்வளவோ முன்யோசனை யுடனும் விசால புத்தியுடனும் வகுக்கப்பட்டிருந்தும் காலத்தால் ஏற்படும் தளர்ச்சியும் மூப்பும்– சாவுங்கூட – அவற்றை விடவில்லை. கால தேச வர்த்தமானங்களுக்கு மீறினதாகவே தான் அன்னையின் ஆதிகாலப் புதல்வர்கள் தர்மத்தை விசாலமாக அமைத்தார்கள். ஆனால் அதைப் பிற்காலத்தில் கையாண்டவர்கள் கால தேச வர்த்தமானங்களின் கட்டுக்கடங்கினவர்களாகி அதைச் சரிவரப் பரிபாலிக்கத் திறமை யற்றுப் போனார்கள். அப்பொழுதப்பொழுது செய்யவேண்டிய சில மாறுதல்களையும் சில்லரை மராமத்துகளையும் செய்யத் தவறினார்கள்– செய்ய மறுத்தார்கள்.

ஆனால் மகா புருஷர்கள் மட்டும் தோன்றாமல் இல்லை. அவர்கள் அவ்வப்போது குறைகளைக் கண்டு நிவர்த்திக்கப் பெரும் தியாகங்கள் செய்தார்கள். ஆனால் ஆதியில் சமூகமே ஒன்றாக இருந்தபொழுது முனிவர்கள் அமைத்த ஸ்தாபனத்தை பிறகு, நாடு சிதைந்த பிறகு தோன்றின தனி மனிதர்கள் சீர்படுத்த முடியவில்லை. புத்தர், ஜீனர், சங்கரர், வித்யாரண்யர், சந்திரகுப்தன், அசோகன், ஹர்ஷன், ராஜேந்திர சோழன், கிருஷ்ண தேவராயர் எல்லோரும் வரிசையாகத் தோன்றி தர்மத்தையும் ஏக சக்கராதிபத்தியத்தையும் மறுபடி நிலைநிறுத்த பல தடவை பாடுபட்டு முயன்றார்கள்.

★★★

'அப்பேர்ப்பட்ட அசகாயசூரர்கள் முயன்று முடிக்க முடியாத காரியத்தை நாம் எப்படி சாதிக்கப் போகிறோம். தாணாஜி!' என்று சிவாஜி கலக்கத்துடன் யோசித்தார்.

'முடியும் முடியா தென்பதைப்பற்றி யோசிக்க நாம் அதிகாரிகள் அல்ல, சத்ரபதி! சத்திய யுகம் முடிந்து கலி ஆரம்பமாகும்பொழுது நம் யுக தர்மத்தை பகவான் கிருஷ்ணன் கீதையில் நிர்த்தாரணம் செய்து விட்டார். கடமையைச் செய்வதுதான் நமது தர்மம். கடமைதான் தர்மம்.'

'ஆ, நீங்கள் கீதையைப் பற்றிச் சொன்னதும் நினைவு வருகிறது. தாதாஜியும் அன்னை ஜீஜாபாயும் எப்பொழுதும் கடமையைப் பற்றித்தான் எனக்குச் சொல்லுவார்கள். கடமையைக் கைப்பற்றிய பிறகு அவர்கள் செய்த உபதேசத்தையே மறந்து விட்டேனே!'

'மறக்கவில்லை மகாராஜா! அதில் அவ்வளவு ஈடுபட்டு விட்டீர்கள். தாதாஜியையும் அன்னையையும் நீங்கள் மறக்க முடியுமா?'

பழைய நாட்களின் நினைப்பும், தாய் முகமும் தாதாஜி கன்ஹதேவரின் முகமும் ஞாபகம் வந்ததும் சிவாஜி உணர்ச்சிப் பெருக்கில் அப்படியே ஸ்தம்பித்துப்போய் உட்கார்ந்துவிட்டார். இடத்தையும் காலத்தையும் சுற்றுணர்வையும் மறந்தார். அஞ்சா நெஞ்சம் படைத்த மகாராஷ்டிர வீரன் கண்களில் திடீரென்று நீர் பெருகிற்று. உதடுகள் நடுங்கின.

தாணாஜி அந்த மகத்தான காட்சியைக் கண்டு பரவசமானார். அவர் வாய்திறக்க முயலவில்லை.

★★★

அந்தி மயங்கி இருட்டுகிற நேரம். பவானியின் கோவிலில் சாயங்கால தீபாராதனை செய்கிற வேளை நெருங்கி விட்டபடியால் மகாராஜாவுக்குத் தகவல் வந்தது. அர்ச்சகரின் தகவலைக் கொண்டுவந்த சேவகனை தாணாஜி மௌனமாகச் சைகை காட்டி வெளியே போகச் சொல்லிவிட்டார். சிவாஜியின் உள்ளத்திலல்லவா அப்பொழுது ஜகஜ்ஜோதியான தீபாராதனை நடைபெற்றது!

கோட்டையின் அந்த மேல் அறையிலும்கூட இருள் கவிய ஆரம்பித்தது. விளக்கேற்ற வந்த ஆளை தாணாஜி வெளியே போகச் சொல்லி விட்டார். சிவாஜியின் யோகத்தை எக்காரணத்தாலும் கலைக்கக் கூடாதென்று அவர் கண்டார்.

திடீரென்று கோவில் மணி அடிக்க ஆரம்பித்தது. அந்த ஓசை மலைச் சாரல்களில் போய் எதிரொலித்து நடுங்கி அடங்கியது. அப்பொழுதும் சிவாஜி அசையவில்லை.

வாலிபன் சிவாஜி ஜீஜாபாயின் அருகில் ஒரு சாளரத்தின் அருகில் உடகார்ந்துகொண்டு சரத்திரத்தின் வீரக் கதைகளைக் கேட்டுக்

கொண்டிருக்கிறான். ஒரு கதையை முடித்துவிட்டுத் தாய் மகனை அன்புடன் பார்த்து 'சிவாஜி, நீயும் ஒருநாள் மகாராஷ்டிரத்தின் உயர்விற்காக வீரச் செயல்கள் செய்து முடிந்தால் என் உள்ளம் குளிரும். நீ க்ஷத்திரியன்; நீ வீரன்; பரம்பரைக் குணங்களும் சுபாவகுணங்களும், தாதாஜி புகட்டிய செயல் குணங்களும் உன்னிடம் பெருமிதமாக இருப்பதால் நீ நிச்சயம் பெரிய காரியங்கள் செய்வாய். நிச்சயம். அது சத்தியம்!' என்றாள்.

அப்பொழுது சிவாஜி 'எப்படி சத்தியம் என்கிறாய்?' என்று கேட்டான்.

'நான் வீரனின் மனைவி, வீரனின் தாய். என் உள்ளம் சுத்தமானது. அதில் தென்படுவதுதான் சத்தியம்' என்று ஜீஜாபாய் சத்தியத்தை சிவாஜிக்கு நிர்ணயம் செய்து காட்டினாள்.

★ ★ ★

நினைவு வரிசையில் அந்த இடத்திற்கு வந்ததும் சிவாஜி மெய்ம்மறந்து மெதுவாகப் பேசலானார்.

'ஆமாம். அன்னை பவானியின் ஆவேசத்துடன் அன்று சொன்னது சத்தியம். தூய உள்ளத்தில் கடமையென்று படுவதுதான் சத்தியம், நிச்சயம் என்று படுவதும் சத்தியம். ஆமாம்... கடமைதான்... கடமை யைத் தவிர நமக்கு வேறு அதிகாரமில்லை... எனக்கு!'

'ராஜா ஜயசிங்கும் அதைத்தான் செய்கிறார். அவுரங்கஜேப்பிடம் சேனாதிபதியாக இருந்து கடமையைச் செய்து தானே அவரும் சத்தியத் தைக் கடைபிடிப்பதாக எண்ணுகிறார்?' என்று தாணாஜி சமயம் பார்த்து மெதுவாகச் சொன்னார்.

சிவாஜிக்கு உடனே சுய நினைவு வந்துவிட்டது.

'நீங்கள் சொல்லுவது சரிதான் தாணாஜி! ஆனால் நான் இப்பொழுது அவுரங்கஜேப்பின் அழைப்பிற்கிணங்கி டில்லிக்குச் செல்வது சமயோசிதம் அல்ல என்கிறீர்களே?'

'ஆமாம், அவுரங்கஜேப் நிச்சயம் உங்களுக்குத் தீங்கிழைப்பார். அவர் அழைப்பில் வஞ்சனை இருக்கிறது என்று என் மனதில் படுகிறது.'

'மகாராஜா ஜயசிங் போகச் சொல்லுகிறார். அவர் சத்தியவாதி.'

'அவுரங்கஜேப் அவருடைய சத்தியத்திற்குக் கட்டுப் பட்டால்தானே?'

'என்னுடைய க்ஷேமத்திற்குத் தான் ஜவாப்தாரியென்றும் நான் டில்லி போவதால் நம் காரியத்திற்கே நன்மை இருக்கிறதென்றும் ஜயசிங் சொல்லுகிறார். அவர் உறுதி என் சமயோசித புத்தியை வென்று விட்டது. டில்லிக்குப் போவதாக வாக்குக் கொடுத்து விட்டேன்!'

'அடடா! காரியம் கெட்டுவிட்டதே!' என்று தாணாஜி கத்தினார்.

'உண்மையாக நடந்துகொள்வதால் காரியம் கெடாதென்றே எனக்கும்

தோன்றிவிட்டது. தாற்காலிகமாக இடர்ப்பட்டாலும் முடிவில் உண்மை வழிக்கு நிச்சயம் வெற்றிதான்.'

'என்ன காரியம் செய்துவிட்டீர்கள்?'

'நல்ல காரியம்தான்.'

'நல்லதாக வேண்டுமே!'

'ஆகும். அதைப்பற்றி என்ன கவலை? செய்ய வேண்டியதை உண்மையாகச் செய்வோம். அதுதானே தர்மம்?' என்றார் சிவாஜி தீர்மானமாக.

தாணாஜி மேலே பேசவில்லை.

★★★

சிவாஜி ஜயசிங் யோசனையைக் கேட்டு டில்லி சென்றதும், அங்கே அவுரங்கஜேப் அவரை அவமதித்துச் சிறையிட்டதும், சிவாஜி தப்பித் திரும்பி வந்ததும் சரித்திரம்.

அந்த சம்பவத்தின் மூலம் மகாராஷ்டிரத்திற்கு நன்மைதான் ஏற்பட்டது. உணர்ச்சி வசப்பட்டு தேசமே ஒருமுகமாக மும்மரித்து வீரச் செயல்கள் செய்தது. வீரர்கள் மகாராஷ்டிர சாம்ராஜ்யத்திற்கு அடிகோலினார்கள்.

●